29.01.2026 OS.No.20/2024 PW1 Name :.சிவக்குமார்

குறுக்கு விசாரணை

1. நான் ஆம்பூரில் குடியிருக்கிறேன். 2ம் வாதி வீரனமலையில் கிராமத்தில் அவர் கணவர் வீட்டில் குடியிருக்கிறார். தாவா சொத்தில் நாங்கள் சுவாதீனத்தில் இல்லை. தாவா சொத்திற்கு எங்கள் பெயரில் கூட்டு பட்டா எதுவும் இல்லை. பிரதிவாதிகள் என்னுடைய சித்தியின் வாரிசுகள். என் தாயார் இறந்துவிட்டார். என் தாயாருக்கு தலையில் அடிப்பட்டு புத்தி சுவாதினம் இல்லாத காரணத்தினால் என் தகப்பனார் கோவிந்தம்மாளை 2வதாக திருமணம் செய்துள்ளார் என்றால் சரியல்ல.
2. என் தகப்பனார் இறக்கும்வரை நானும் பிரதிவாதிகளும் கோவிந்தம்மாளும் ஒன்றாகதான் குடியிருந்தோம். என் தகப்பனார் உயிருடன் இருந்த காலத்தில் வழக்கு சொத்தை கோவிந்தம்மாளுக்கு தானமாக கொடுத்துள்ளார் என்றால் அவ்வாறு இல்லை. என் தாயார் பெயரில் என் தகப்பனார் வேறு சொத்துகளை கொடுத்துள்ளார் என்றால் உண்மை கிடையாது. தாவா சொத்து கோவிந்தம்மாளுக்கும் பிரதிவாதிக்கும் சொந்தமானது என்பதால் அவற்றில் நாங்கள் பாகபிரிவினை எதுவும் கேட்கமுடியாது என்றால் சரியல்ல. வழக்கில் செலுத்தியுள்ள நீதிமன்ற கட்டணம் தவறானது என்றால் சரியல்ல.

மேற்படி சாட்சியின் வாக்குமூலம் திறந்த 29/01/2026 இவ்வழக்கரங்கில் என்னால் சொல்ல சொல்ல தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கபட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு கையொப்பம்/கைரேகை செய்யப்பட்டது.

RAJA B

SUBORDINATE JUDGE, VANIYAMBADI
Digitally signed by RAJA B
Location: THIRUPATHUR
Date: 2026.01.29 17:05:34 +0530

சார்பு நீதிபதி
வாணியம்பாடி.